**<u>STARTING TIME 12.48 P.M</u>**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 78/2026**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 10.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : ஜெய்சங்கர் Father's Name : வீரன்

Address : M.G.R. தெரு, வெங்குப்பட்டு கிராமம், சோளிங்கர் வட்டம்.

Age : 55

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 1–ம் வாதி ராமமூர்த்தி கேட்டுக் கொண்டதன் பேரில் நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், சரிதான். 1–ம் வாதியின் தங்கை லதா என்னுடைய மனைவி என்றால், சரிதான். அந்த உறவு முறையை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். 1–ம் வாதி ராமமூர்த்தி எனக்கு நெருங்கிய உறவினர் என்றால், சரிதான்.

2. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், நரசிம்ம ரெட்டியும், அவரது தங்கை இருசம்மாளும் கூட்டாக சேர்ந்து வாங்கிய சொத்தை, பின்னிட்டு இருசம்மாள் அவரது அண்ணன் நரசிம்ம ரெட்டிக்கே கொடுத்துவிட்டார். அந்த இருசம்மாள் என்பவர் என்னுடைய தாயார் என்றால், சரிதான். அந்த விவரத்தையும் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான்.

3. நரசிம்ம ரெட்டியும், அவரது தங்கை இருசம்மாளும் சேர்ந்து தாவா சொத்தை எந்த வருடம் வாங்கினார்கள் என்றால், சுமார் 45 வருடங்களுக்கு முன்பு வாங்கினார். அந்த பத்திரத்தை பார்த்தேனா என்றால், எனக்கு படிக்க தெரியாததால் அது பற்றி எனக்கு தெரியாது. அதுபோல் எனது அம்மாவும், அவரது அண்ணனும் தாவா சொத்தை கூட்டாக வாங்கிய விவரம் எப்படி தெரியும் என்றால், அந்த சொத்தின் வழியாக மாடு ஒட்டி போகும் போது தெரியும். அந்த விவரத்தையும் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான்.

4. எனது தாயாரான இருசம்மாள், 1–ம் வாதியின் அத்தை என்றால், சரிதான். அந்த விவரத்தையும் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் ஏன் தாவா சொத்தை என் தாயாரான இருசம்மாள் கிரையம் வாங்கினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், அது பற்றி தெரியவில்லை.

5. தாவா சொத்தை வாதிகளும், இருசம்மாளும் அனுபவித்து வந்தார்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை, அதில் குடிசை வீடு போட்டு அனுபவித்து வந்தார்கள். அதுபோல் குடிசை வீடு கட்டி அனுபவித்து வந்தார்கள் என்ற விவரத்தையும் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான்.

6. 1–ம் வாதியின் ராமமூர்த்தியின் தந்தையார் பெயர் என்னவென்றால், நரசிம்ம ரெட்டி ஆகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் நரசிம்ம ரெட்டி, வாதிகள் பெயரில் எழுதி வைத்ததாக சொல்லும் உயில் சாசனத்தை பார்த்துள்ளேனா என்றால், பார்க்கவில்லை, ஆனால் சொன்னார்கள். அந்த உயில் சாசனம் எந்த வருடம் எழுதப்பட்டது என்றால், சுமார் 13 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்டது.

7. அந்த உயில் சாசனத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்களா என

தெரியுமா என்றால், தெரியாது. தாவா சொத்தில் எனது அம்மா இருசம்மாளுக்கு உரிமை எதுவும் உள்ளதா, இல்லையா என்றால், எனது அம்மா ஏற்கனவே அவரது அண்ணனுக்கு எழுதிக் கொடுத்துவிட்டதால் தாவா சொத்தில் உரிமை இல்லை. வாதிகளே தாவா சொத்தில் மண், மொரம்பு கொட்டியதாக சொல்லாத நிலையில் நான் அதுபோல் வாதிகள் மண், மொரம்பு கொட்டியதாக பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

8. இவ்வழக்கில் ஏற்கனவே சாட்சியம் அளித்த செல்வம் என்பவரை தெரியுமா என்றால், தெரியும். அவர் யார் என்றால், 1–ம் வாதியின் அக்கா கணவர் என்றால், சரிதான். பாஷ்ய ஐயங்கார் என்பவரை தெரியுமா என்றால், தெரியாது. பாஷ்ய ஐயங்கார் என்பவர் சோளிங்கர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எனது அம்மா மற்றும் அவரது அண்ணன் நரசிம்ம ரெட்டி ஆகியோர்கள் மீது ஒரு வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், மேற்படி பாஷ்ய ஐயங்கார் சோளிங்கர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எனது அம்மா மற்றும் அவரது அண்ணன் நரசிம்ம ரெட்டி ஆகியோர்கள் மீது ஒரு வழக்கு தாக்கல் செய்து அதில் அவருக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்பட்டு அதன்பேரில் அவர் தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல.

9. நானும், எனது அம்மாவும் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு கூட்டுக் குடும்பமாக தான் வசித்து வந்தோம் என்றால், சரிதான். அந்த சமயத்தில் என் தாயார் சோளிங்கர் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு செல்வார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. சோளிங்கர் நீதிமன்றத்திற்கு நானும, எனது தாயாருடன் சென்றுள்ளளேன் என்றும், அந்த வகையில் மேற்படி வழக்கு பற்றி எனக்கு தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக வேண்டி அந்த விவரம் தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

10. தற்போது தாவா சொத்தை பாஷ்ய ஐயங்காரின் வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. வாதிகளோ, அவரது தகப்பனாரோ எந்த காலக் கட்டத்திலும் தாவா சொத்தை அனுபவித்ததில்லை என்றும், வாதிகள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்பதால், வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்தானது இன்று வரை 1–ம் பிரதிவாதியின் கட்டுப்பாட்டிலும், அனுபவத்திலும் தான் உள்ளது என்றும், வழக்கிற்காக வேண்டி வாதிகள் அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME: 01.15. P.M.**

Special Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.03.10 16:34:33 +0530